சொல்லப்பட வேண்டிய விஷயங்கள் என்கிற காரணத்தால் நான் அதிலே ஊடுருவிச்செல்ல விரும்பவில்லை, அது நல்லதும் அல்ல என்ற காரணத்தினால்.

மூன்று பேர்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கருத்த கண்ணன் என்ற—40 வயது உள்ளவர் ஒருவரும், ராமசாமி என்கின்ற 20 வயது வாலிபர் ஒருவரும், கணேசன் என்பவரும் இந்தச் சம்பவத்தின் காரணமாக மரணமடைந்திருக்கிறார்கள். இதிலே சாமுவேல், நாராயணன், துரைக்கண்ணு, கோபால், பிச்சை ஆகிய ஐவர் இதுவரையிலும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்ற குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்கள் ஆந்திரக் கடற்கரைப் பகுதிக்குச் சென்று ஒளிந்திருக்கிறார்கள் என்றும், அவர்களைத் தேடுவதிலே போலீசார் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் எனக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் நம் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். நேற்று மேலவையிலே இதுபற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில், வன்முறை உள்ளம் கொண்டவர்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும், யாராக இருந்தாலும், காவல் துறையினர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்கமாட்டார்கள், இந்த அரசும் கடும் நடவடிக்கை எடுக்கும் என்ற எச்சரிக்கையினை விடுத்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணுற்றிருக்கலாம்.

இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றிக் காவல் துறையினரும், விரைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தகவலைத் தந்து, இது போன்ற காரியங்கள் நடைபெறாமல் இருக்க, அனைத்துக் கட்சிக் கூட்டங்களைக் கூட்ட வேண்டும் என்று சொன்னார்கள். நானே அனைத்துக் கட்சி சார்பிலே நான், முதலிலேயே, முற்போக்குக் கூட்டணிச் சார்பில் அறிக்கை விட்டிருக்கிறேன். முற்போக்குக் கூட்டணியில் இருக்கும் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக் கொள்ளக்கூடிய அறிக்கைதான் அது என்று நினைக்கிறேன். அதேபோல் அறிக்கைகளை மற்றக் கட்சிக்காரர்களும் விட்டாலும், அரசியல் சம்பவமோ அல்லது வேறு சம்பவமோ, எந்தச் சம்பவமாக இருந்தாலும், தமிழ் நாட்டில் வன்முறைகள் விளைந்திடாமல், கிளர்ந்தெழாமல் இருக்கத் தக்க முறையில் விளக்கங்களைத் தர மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவோடு நிறுத்திக்கொண்டு, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற எனது கருத்தைத் தங்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதன்மீது விவாதம் தேவையில்லை என்கிற காரணத்தால் இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971".

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) நிறைவேற்றப்படவேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் :—